OS: 156/2023

Date: 06.10.2025

பெயர் : சிகாமணி **(வா.சா.1) ஆஜர்**, **சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**<u>6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1. நான் 8ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் இந்த வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்திருக்கிறேன். நான் இந்த வாழக்கில் ஆதார் அட்டை தாக்கல் செய்திருக்கிறேன். ஆதார் கார்டிற்கான விவரத்தை நான் தான் சொன்னேனா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான் என்னுடைய ஆதார் கார்ட் என்றால் ஆமாம், அது **பி.வா.சா.ஆ.1.**

2. தற்போது என்னிடம் காட்டப்படுவது எனது சகோதரியான 1ம் வாதியின் ஆதார் கார்ட் என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ.2.** என்னுடைய ஆதார் கார்ட்டில் எனது பிறந்த தேதி 13.06.1963 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். வழக்கு சொத்தை எனது தகப்பனார் 1975ம் வருடம் வாங்கினார் என்றால் ஆமாம். எனது சகோதரி சாரதா என்னைவிட 2 வருடம் மூத்தவர் என்றால் ஆமாம்.

3. 1975ம் வருடம் தாவா சொத்தை என் தகப்பனார் விலைக்கு வாங்கியபோது எனக்கு 12 வயது என்றாலும், என் சகோதரி சாரதாவிற்கு 14 வயது என்றாலும் ஆமாம். அந்த சமயத்தில் நாங்கள் இருவரும் பள்ளியில் படித்து கொண்டிருந்தோம் என்றால் ஆமாம். எனது தகப்பனார் மாக்கல் (தோசை, பனியாரக்கல் செய்யும் வேலை) வேலை செய்து வந்தார் என்றால் ஆமாம். என் தாயார் வீட்டு வேலைகள் செய்து வந்தார் என்றால் ஆமாம்.

4. என் தகப்பனார் தான் எங்களை படிக்கவைத்து திருமணம் செய்து வைத்தார் என்றால் இல்லை, என் தாத்தா தான் செய்துவைத்தார்.

வழக்கில் காண்பித்துள்ள சொத்துகளைத்தவிர என் தகப்பனாருக்கும் என் மூதாதையருர்களுக்கும் வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் ஆமாம். நான் வழக்கு போட்டிருக்கும் சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 42 செண்ட் என்றால் ஆமாம்.

5. 5ம் பிரதிவாதி எனது சகோதரரான 2ம் பிரதிவாதி ஜெயராமனின் மகன் என்றால் ஆமாம். வழக்கு சொத்தை எனது தகப்பனார் 5ம் பிரதிவாதிக்கு 2014ம் வருடம் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் ஆமாம். ஆனால் அந்த விவரம் எங்களுக்கு தெரியாது. 2020ம் வருடம் தான் தெரியவந்தது. என்ன விஸ்தீரணத்திற்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் 1 ஏக்கர் 42 செண்டிற்கும் எழுதி வைத்துவிட்டார்.

6. 1 ஏக்கர் 42 செண்ட் நிலத்தில் 1 ஏக்கர் 8 செண்ட் நிலத்தை 2016ம் வருடம் 2, 5 பிரதிவாதிகள், 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் ஆமாம். தாவா சொத்தை என் தகப்பனார் விலைக்கு வாங்கியதற்கு வாதிகளான நாங்களும், 1 முதல் 4 பிரதிவாதிகளும் பணம் கொடுத்ததாக சொல்லியிருக்கும் நிலையில் அதற்கு ஆதாரம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ஆனால் எனது 2 தாத்தாக்களும் நாங்களும் ஒரே குடும்பமாக குடியிருந்போது நாங்கள் எல்லோரும் சேர்ந்து என் அப்பா பெயரில் வாங்கி வைத்தோம்.

7. 2ம் பிரதிவாதி ஜெயராமன் எனக்கு எத்தனை வருடம் இளையவர் என்றால் சுமார் 2வருடம் இளையவராக இருக்கலாம். 3ம் பிரதிவாதியும் எனக்கு இளையவர் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதியும் பள்ளி படிப்பு படித்திருக்கிறார் என்றால் 2, 3 பிரதிவாதிகள் 10ம் வகுப்பு வரை

படித்திருக்கிறார்கள். 1, 2 வாதிகளாகிய நாங்களும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் தாவா சொத்தை விலைக்கு வாங்கியபோது பள்ளி படிப்பை படித்துக்கொண்டிருந்த நிலையில் நாங்கள் தாவா சொத்தை விலைக்கு வாங்க பணம் கொடுத்ததாக சொல்வது நம்பும்படியாகவும், ஏற்கும்படியாகவும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் பணம் கொடுக்கவில்லை எங்களது 2 தாத்தாக்களும் பணம் கொடுத்துதான் நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தபோது என் அப்பா பெயரில் வாங்கினார்கள்.

8. என் 2 தாத்தாக்களும் தாவா சொத்தை விலைக்கு வாங்க பணம் கொடுத்ததாக தாவாவில் சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். தாவாவில் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தை விற்று தாவா சொத்தை விலைக்கு வாங்கியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். பூர்வீக சொத்தை என் தந்தை வழி தாத்தா விற்ற வகையிலும் மற்றும் என் தாய் வழி தாத்தாவும் பணம் கொடுத்தும் தாவா சொத்தை என் அப்பா பெயரில் விலைக்கு வாங்கி வைத்தார்கள்.

9. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து எந்த கிராமத்தில் இருந்தது என்றால் பம்பாரப்பட்டியிலும், நாமகிரிபேட்டையிலும் இருந்தது. அது வீடு ஆகும். அந்த சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்துக்கள் எந்த தேதியில் யாருக்கு, எவ்வளவு தொகைக்கு விற்கப்பட்டது என்று தெரியுமா என்றால் நினைவில்லை.

10. அந்த சொத்துக்கள் விற்கப்பட்டு எவ்வளவு காலத்திற்கு பின்னர் தாவா சொத்து விலைக்கு வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது அப்போது நான் சின்ன வயதாக இருந்தேன். பூர்வீக சொத்துக்கள் விற்கப்பட்டதற்கு ஆதாரம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எனக்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை என்றாலும், நான் பூர்வீக சொத்தை விற்று தாவா சொத்தை விலைக்கு வாங்கியதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

11. பூர்வீக சொத்துக்கள் விற்பனை செய்ததாக சொல்லும் நிலையில் யார் பெயரில் அந்த பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் அப்போது சின்ன வயதாக இருந்தேன். எங்களது குடும்பத்திற்கு மேற்கண்டவாறு எந்த பூர்வீக சொத்துக்களும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

12. எனக்கு எழுத, படிக்க தெரியும் என்றால் அவ்வளவிற்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பூர்வீக சொத்துக்களை விற்று வா.சா.ஆ.1ல் கண்ட சொத்துக்கள் வாங்கப்பட்டதாக வாசகம் ஏதாவது குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. என் தகப்பனார் பூர்வீக சொத்துக்களை விற்று வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தை வாங்கியிருந்தால் மேற்கண்ட விவரம் வா.சா.ஆ.1ல் எழுதப்பட்டிருக்கும் என்றாலும் எனது தகப்பனாரின் சுயசம்பாத்தியத்தில் தாவா சொத்தை வாங்கியதால் தான் மேற்கண்டவாறு எந்த விவரமும் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

13. தாவா சொத்து பூர்வீக சொத்தை விற்று வாங்கப்படவில்லை என்றாலும், என் தகப்பனாரின் சுயசம்பாத்தியத்தில் வாங்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

எங்களுக்கும், 3ம் பிரதிவாதிக்கும் சுமுகமான உறவுமுறை இருக்கிறது என்றால் இல்லை. பேச்சுவார்த்தையுண்டு ஆனால் வழக்கு போட வரமறுத்துவிட்டார்கள். எனக்கும், 3ம் பிரதிவாதிக்கும் போக்குவரத்து உண்டு என்றால் இல்லை. வழக்கு போட வரமறுத்துவிட்டதால் 2023ம் வருடத்தில் இருந்து போக்குவரத்து இல்லை.

14. 10.03.2014ம் தேதியன்று தான் என் தகப்பனார் 5ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். அந்த பத்திரத்தில் 3ம் பிரதிவாதியான என் சகோதரி சந்திரா ஒரு சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. என் தாயார் பெயரில் பட்டா வழியாக ஒரு சொத்து பாத்தியப்பட்டிருந்தது என்றால் ஆமாம். முன்னால் இருந்தது தற்போது இல்லை.

15. அந்த சொத்தை 06.10.2016ம் தேதியன்று என் தாயார் என் சகோதரரான 2ம் பிரதிவாதி ஜெயராமனுக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் 06.10.2016ம் தேதியில் என் தாயார் 2ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது என்றால் சாட்சி முதலில் ஆமாம், என்று சொன்னதால் அது **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்ட நிலையில், பின்னிட்டு சாட்சி அந்த பாத்திரத்தில் உள்ள கையொப்பம் பற்றி தனக்கு தெரியவில்லை என்கிறார்.

16. நானும், என் மூத்த சகோதரி சாரதாவும் அந்த பாத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறோம் என்றாலும், இந்த விவரம் எங்களுக்கு நன்கு தெரியும் என்றாலும், தற்போது நான் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் அம்மா பெயரில் இருந்த

சொத்து இப்போது யார் பெயரில் இருக்கிறது என்றால் எனக்கு நினைவில்லை. எனது சகோதரர் பெயரில் இருப்பது நன்கு தெரியும் என்றாலும் நாங்களே எனது சகோதரர் பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டு தற்போதுதெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17. என் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 15.02.2016ம் தேதியன்று இறந்தார். என் தகப்பனார் இறந்து 20, 25 நாட்கள் கழித்து 6ம் பிரதிவாதிக்கு 2, 5 பிரதிவாதிகள் சேர்ந்து வாட்டர் சர்வீஸ் ஸ்டேசன் வைப்பதற்காக கிரையப்பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் ஆமாம். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் நாங்கள் சொத்தில் பங்கு கேட்கவில்லை என்றால் ஆமாம். எல்லோரும் ஒன்றாக இருந்ததால் கேட்கவில்லை.

18. என் தகப்பனார் உயிருடன் இருந்தபோது 5ம் பிரதிவாதி பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரத்தை என் தகப்பனார் எங்களிடம் சொன்னாரா என்றால் இல்லை. 6ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் 48 செண்ட் பூமியில் 1 ஏக்கர் 8 ½ செண்ட் மட்டும்தான் விற்பனை செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. மொத்த பூமி 1 ஏக்கர் 48 செண்ட் அதுதான் தெரியும். வேறு யாருக்காவது விற்பனை செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை.

19. என் அப்பா இறந்த பின்னர் தாவா சொத்தின் பட்டாவில் எங்கள் பெயரை சேர்க்கச்சொல்லி நடவடிக்கை எடுத்தோமா என்றால் அதுபற்றி தெரியவில்லை. தற்போதாவது நடவடிக்கை எடுத்தோமாஎன்றால் நாங்கள் கூட்டுக்குடும்பமாக அனுபவித்து வந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது வழக்கு போட்டிருக்கிறேன். என் தகப்பனார் இறந்த பிறகு என்

பெயரோ, என் சகோதரர் பெயரோ, சகோதரிகள் பெயரோ தாவாசொத்திற்கான பட்டாவில் சேர்க்கப்படாமல் தான் இருக்கிறது என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. நாங்கள் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்துவந்ததாக சொல்லும் நிலையில் அதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

20. நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் பட்டாவான வா.சா.ஆ.4 ஆவணத்தில் 6ம் பிரதிவாதியின் பெயர் தான் காணப்படுகிறது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் தகப்பனார் தாவா சொத்து அவருக்கு சுயராஜ்ஜிதான பாத்தியப்பட்டது என்று சொல்லியிருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. என் தகப்பனார் மேற்படி பத்திரத்தில் தன்னுடைய ஆண், பெண், இதர வாரிசுகள் யாருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொல்லியிருக்கிறார் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கே அந்த சொத்திற்கு முழு உரிமை இல்லாதபோது அவர் எப்படி அவ்வாறு சொல்லமுடியும் என்று சாட்சி கூறுகிறார்.

21. என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை 5 பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டதால் வேறு யாருக்கும் தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. கூட்டுசுவாதீன அனுபவத்தில் இருப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாததால் நான் செலுத்தி இருக்கும் முத்திரைத்தாள் கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

22. 6ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை 2,. 5 பிரதிவாதிகள் கிரையம் செய்து வைத்த பின்னர் 4 வருடங்களுக்கு பின்னிட்டு 2, 5 பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதி மீது ஒரு வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 6ம் பிரதிவாதி தாவா சொத்தை விலைக்கு வாங்கிய

விபரம் எனக்கு 2020ம் ஆண்டு தெரியவந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். அதற்கு பிறகு தாவா சொத்தின் பட்டாவில் எங்கள் பெயரை சேர்க்க விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

23. 6ம் பிரதிவாதி பெயரில் இருக்கும் பட்டாவை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஆமாம். அந்த கிரையத்தை இரத்து செய்யச்சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கிரைய விவரம் தெரிந்து 3 வருடத்திற்கு பின்னிட்டு தான் அதை இரத்து செய்யச்சொல்லி வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் 3ம் வருடத்திற்குள் வழக்கு தாக்கல் செய்தோம். என் அண்ணனிடம் சமாதனாம் பேசியும், ஒத்துவராததால் வழக்கு தாக்கல் செய்வது தள்ளிப்போய்விட்டது.

24. 5ம் பிரதிவாதி பெயருக்கு தான செட்டில் மெண்ட் எழு தி வைத்த பின்னர் 9ம் வருடங்களுக்கு பின்னர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் ஆமாம். எங்களுக்கு அந்தவிவரம் தெரியவில்லை. எனவே தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் இறந்து 8 வருடங்களுக்கு பின்னர் தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் ஆமாம். 6ம் பிரதிவாதி என்ன பதில் சொல்லியிருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அந்த விபரம் எனக்கு தெரியும் என்று, எனது பிரமாண பத்திரிக்கையிலேயே குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

25. 6ம் பிரதிவாதி க்கு 1 ஏக்கர் 8 ½ செண்ட் நிலத்தை விற்பனை செய்த பின்னர் 2, 5 பிரதிவாதிகள் விஜயலட்சுமி, தேன்மொழி, ராஜம்மாள் ஆகியோர்களுக்கு மீதி நிலத்தின் ஒரு பகுதியை விற்பனை

செய்திருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதுபோக மீதி நிலத்தை ஒரு செல்வராஜ் என்பவருக்கு விற்பனை செய்திருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் 5ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்ததால் தான் எங்கள் பெயர் தாவா சொத்திற்கான பட்டாவில் இல்லை என்றால் சரியல்ல.

26. தாவா சொத்தில் என் தகப்பனாரின் சுயராஜ்ஜித சொத்து என்பதால் அவர் தனது விருப்பத்திற்கு யார் பெயருக்கு வேண்டுமானலும், வில்லங்கம் செய்யலாம் என்றால் சரியல்ல. அது கூட்டுக்குடும்பச்சொத்து. தாவா சொத்த என் தகப்பனாரின் சுயராஜ்ஜித சொத்து என்பதால் அவர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை 5ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைக்க உரிமை இருக்கிறது என்றாலும், 2, 5ம் பிரதிவாதிகள் தாவா சொத்தை 6ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்கவும் உரிமை இருக்கிறது என்றாலும், எனவே தான செட்டில் மெண்ட் பத்திரமும், 6ம் பிரதிவாதியின் கிரையப்பத்திரமும் சட்டப்படி செல்ல தகுந்த ஆவணங்கள் என்றால் சரியல்ல.

27. வழக்கு தாக்கல் செய்வதற்கான ஆவணங்களை ஜெயராமன்தான் எடுத்துக்கொடுத்தார் என்றால் இல்லை. 2, 5 பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதி மீது ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் 2020ம் வருடம் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றாலும், அந்த வழக்கை 2023ம் வருடம் திரும்ப பெற்றுக்கொண்டார்கள் என்றாலும் எனக்கு அதுபற்றி தெரியாது. அவர் திரும்ப பெற்றுக்கொண்ட பின்னர் அவருடைய தூண்டுதலின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

28. தாவா சொத்துக்கள் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சுயராஜ்ஜித சொத்து என்பதால் அதில் பாகம்கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி கிரையம் பெற்ற தாவா சொத்திற்கு அவரே முழு உரிமையாளர் என்றாலும், அதனால் தான் அவர் பெயரில் அனைத்து ஆவணங்களும் இருக்கிறது என்றாலும், எனவே அதனை இரத்து செய்யக்கோரும் உரிமை யாருக்கும் இல்லை என்றாலும் சரியல்ல. அது போர்ஜரியான ஆவணம்.

29. தாவா சொத்தை வேறு நபர்கள் விலைக்கு வாங்கியிருக்கும் நிலையில் அந்த சொத்திற்கு அவர்கள் உரிமையாளர்கள் என்பதால் அவர்களை நான்வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் கேட்டிருக்கும் பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றாலும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல. 6ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கவேண்டி நானும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.